ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை
காஞ்சிபுரம் மாவட்டம்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (வளர்ச்சிப் பிரிவு), காஞ்சிபுரம்
அலுவலக உதவியாளர் பதவிக்கான விளம்பர அறிவிக்கை

ந.க.எண்.13918/2019/பஅ4 நாள். 09.11.2019

காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் காலியாக உள்ள அரசு தலைப்பின் கீழ் ஊதியம் பெறும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 11.11.2019 முதல் 25.11.2019 அன்று பிற்பகல் 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1	பதவியின் பெயர்	-	அலுவலக உதவியாளர்
	பணியின் தன்மை	-	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகங்களில் பணிபுரியும் உயர் அலுவலர்களுக்கு அடிப்படை பணிகள் மேற்கொள்வதில் உதவி செய்தல் மற்றும் அலுவலக நடைமுறை பணிகளில் உதவிடுதல்.
2.	சம்பளம்	-	ரூ.15700-50000(Level-1) என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் இதர படிகளுடன்
3.	வயது	-	01.07.2019 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்
	வகுப்பு	-	அதிகபட்ச வயது வரம்பு (01.07.2019 அன்று உள்ளவாறு)
	பொதுப்பிரிவு	-	30 வயதிற்குள்
	BC/MBC		32 வயதிற்குள்
	SC/ST பிரிவு	-	35 வயதிற்குள்
4.	மொத்த பணியிடங்கள்	-	1 எண்ணிக்கை
5.	இட ஒதுக்கீடு விவரங்கள்	-	**Scheduled Caste-Arunthathiyar (SCA) (Women) (Destitute Widow)**
6.	கல்வித்தகுதி மற்றும் பிற தகுதிகள்	-	8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மிதிவண்டி ஓட்டத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.
7.	விண்ணப்ப படிவம்	-	இப்பணியிடத்திற்கான விண்ணப்ப படிவத்தினை www.kanchi.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
8.	பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பெற கடைசி நாள்	-	25.11.2019 பிற்பகல் 5.45 மணி வரை

நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை www.kanchi.nic.in இணையதளத்திலும், தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணைதளத்திலும் (National Career Service Portal) www.ncs.gov.in உள்ள விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
3. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தினை, 11.11.2019 முதல் 25.11.2019 அன்று பிற்பகல் 5.45 மணி வரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), முதல் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம்-631 501 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும்.
4. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தில் உள்ளவாறு விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
5. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரீசீலிக்கப்படமாட்டாது.
7. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

M. அமலன்

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சி)
காஞ்சிபுரம்.

09.11.19